மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.ம.எண்.08/2023
உள்
அசல் வழக்கு எண்.26/2019
-------------

ரா.அழகர்சாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ரா.சீத்தாலட்சுமி
2. ரா.சீனிவாசன்
3. கி.கிருஷ்ணவேணி
4. ரா.ஜெயலெட்சுமி
5. த.கருப்பசாமி
6. எஸ்.என்.பாஸ்கரன் (இறப்பு)
7. எஸ்.என்.ரமேஷ்பாபு
8. சார்பதிவாளர், சாத்தூர்
9. பா.ரமாதேவி
10. பா.சினேகா
11. பா.அபிஷேக்
12. மாவட்ட பதிவாளர்
    மாவட்ட பதிவாளர் அலுவலகம்
    விருதுநகர் ... உத்தேச எதிர்மனுதாரர்/
    12ம் உத்தேச பிரதிவாதி

இந்த மனு 20.07.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 17.11.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், 5, 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.கே.பாண்டீஸ்வரி அவர்கள் ஆஜராகியும், 8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4, 7 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதார்கள்

தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் 151 சிபிசி-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா அசல் வழக்கில் 12ம் உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியாக விருதுநகர் மாவட்ட பதிவாளர் அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 12.07.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

தாவா வழக்கானது தற்போது சீர்திருத்த வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தாவா வழக்கில் 7வது பிரதிவாதியாக சாத்தூர் சார்பதிவாளர் அவர்களை சேர்த்துள்ளார்கள். தற்போது சார்பதிவாளர் தரப்பினராக உள்ள எந்தவொரு வழக்கிலும் மாவட்ட பதிவாளரை தரப்பினராக சேர்க்க வேண்டுமென்பதால் தாவா வழக்கை வனைந்த விதத்தில் எவ்வித குறைபாடும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மாவட்ட பதிவாளரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாவிடில் மனுதாரர் தரப்பிற்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படுவதாய் உள்ளது என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்**:-

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள அசல் பிராதில் பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து அசல் பிராதின் 8ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லாதது என விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில் அசல் பிராது தாக்கல் செய்யும்

போதே 8ம் பிரதிவாதியின் மேலதிகாரியை ஓர் தரப்பினராக சேர்க்க வேண்டுமென்ற விவரத்தை நன்கு அறிந்திருந்தும் அசல் பிராது தாக்கல் செய்யும்போதே மாவட்ட பதிவாளரை ஒரு தரப்பினராக சேர்ககாமல் தற்போது மனு தாக்கல் செய்திருப்பது வழக்கை காலதாமதப்படுத்தும் எண்ணமே ஆகும். எனவே, 5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை ஏற்றுக்கொண்டு மனுதாரர்/வாதியின் மனுவை 5ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதியின் செலவு தொகையோடு தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) **<u>8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>**:-

தாவா மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கம் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவானது எதிர்மனுதாரர்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். தாவா அசல் வழக்கானது பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டதாகும். தாவா அசல் வழக்கானது பகுதி பாகப்பிரிவினை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை நிறைவு செய்ய வேண்டும் என்கிற காரணத்திற்காக வேண்டியும், தாவா வழக்கு சொத்துக்களை தவிர்த்து வேறு சொத்துக்கள் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படும் என்பதால் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். அரசை கட்சியாக சேர்க்கவில்லை. தாவா மனுவை தாக்கல் செய்து பரிகாரம் கோரி இயலாது. பிரிதொரு வழக்கிற்கு வழக்குமூலம் எழாது என்பதற்காக வேண்டி தாவா மனுவில் பரிகாரம் கோர இயலாது. அதனால் தாவா மனு எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும்.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **<u>தீர்வு:-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரைகளும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. எதிர்மனுதாரர்களால் எதிருரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்களை வழக்கு விசாரணையின்போது மட்டுமே தீர்மானிக்க முடியும். மனுதாரரால் தாவா அசல் வழக்கில் 12ம் உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியாக விருதுநகர் மாவட்ட பதிவாளர் அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 12.07.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போயும், அவசிய தரப்பினர்களை தரப்பினர்களாக சேர்க்காத தோஷத்திற்கு ஆளாகக்கூடும். ஒரு வழக்கிற்கு ஒரு தரப்பினர் அவசியமா? இல்லையா? என்பதை வழக்கு விசாரைணயின் போது மட்டுமே முடிவு செய்ய முடியும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். சார்பதிவாளர் தரப்பினராக உள்ள எந்தவொரு வழக்கிலும் மாவட்ட பதிவாளரை தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். தவறும்பட்சத்தில் இவ்வழக்கு அவசிய தரப்பினரை கட்சி சேர்க்காத தோசத்திற்கு ஆட்படக்கூடும். அதனால் மனுதாரர் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டத்திற்கும் ஆளாகக் கூடும். எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள், மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு தாவா அசல் வழக்கில் 12ம் உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியாக விருதுநகர் மாவட்ட பதிவாளர் அவர்களை வழக்கில் தரப்பினராக

சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 12.07.2023ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.